# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**பல்லாண்டுக்கான மின் கட்டணவீதத் திட்டத்தின்படி மின் செலுத்தல் / மின் பகிர்மானத்திற்கான மின் கட்டணவீதத்தை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்**

**(அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ/ப.ஆ.மி.க./18/1, 11–02–2009ஆம் நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 61ஆம் பிரிவின்படி (இதன்பின்பு இதில் முதன்மை ஒழுங்குமுறைவிதிகள் என்று வழங்கப்படும்) 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டணவீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2005 ஆகஸ்டு 3ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் (பகுதி VI– பிரிவு 2 பின்னிணைப்பில்) வெளியிட்டுள்ளது என்பதாலும் ;

மற்றும் ஆணையத்தினால் அறிவிக்கப்படவேண்டிய கால அளவிற்கு மின் செலுத்தல் மற்றும் மின் பகிர்மான உரிமம்தாரருக்கு பல்லாண்டுக்கான மின் கட்டணவீதத்தை ஆணையம் செயற்படுத்தலாம் என்று மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதிகளின் 14ஆம் ஒழுங்குமுறைவிதியின் (1)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதி குறித்துரைத்துள்ளது என்பதாலும்,

மற்றும் இந்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட தேசிய மின் கட்டணவீதக்கொள்கையின் பத்தி 5.3(h)(1)ல் 2006 ஏப்ரலிலிருந்து நிர்ணயிக்கப்படவேண்டிய மின் கட்டணவீதம் பல்லாண்டுக்கான மின் கட்டணவீதமாக இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம்

36/2003) 181ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 61ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, முந்திய வெளியீட்டிற்குப் பின்பு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம் பின்வரும் ஒழுங்குமுறை விதிகளைச் செய்கிறது, அதாவது :–

## அத்தியாயம் – I

<u>பொது</u>

1. <u>குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் </u>:

(a) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (பல்லாண்டுக்கான மின் கட்டண வீதத் திட்டத்தின்படி மாநிலத்திற்குள் மின் செலுத்தல் / மின் பகிர்மானத்திற்கான மின் கட்டணவீதத்தை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகள் என்று வழங்கப்பெறும்.

(b) இந்த ஒழுங்குமுறை விதிகள், தமிழ்நாடு மாநிலத்திற்குள் மின் செலுத்தல் / மின் பகிர்மான தொழிலில் ஈடுபட்டிருக்கிற நபர் எவருக்கும் பொருந்தத்தக்கதாகும்.

(c) இந்த ஒழுங்குமுறை விதிகள், 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டண வீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகளுடன் சேர்த்து படிக்கப்படுதல் வேண்டும்.

(d) இந்த ஒழுங்குமுறை விதிகள், தமிழ்நாடு அரசிதழில் அவை வெளியிடப்பட்ட நாளியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

2. <u>பொருள் வரையறைகள் </u>:

1) இந்த ஒழுங்குமுறை விதிகளில் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி , –

(a) ‘‘சட்டம் ’’ என்பது, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டம் (36/2003) என்று பொருள்படும் ;

(b) ‘‘மொத்த வருவாய்த் தேவை’’ என்பது, ஆணையத்தினால் மின் கட்டணங்கள் மற்றும் கட்டணங்கள் மூலம் வசூலிக்கப்படுவதற்கு

அனுமதிக்கப்பட்டதும், நிதியாண்டிற்காக உரிமம் வழங்கப்பட்ட தொழில் தொடர்பான செலவுகளை ஏற்பதற்குத் தேவைப்படும் வருவாய் என்று பொருள்படும் ;

(c) ‘‘அடிப்படை ஆண்டு’’ என்பது, கட்டுப்பாட்டுக் கால அளவின் முதல் ஆண்டினை அடுத்து முந்தி வரும் நிதியாண்டு என்று பொருள்படும் ;

(d) ‘‘மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம்’’ என்பது, இந்தச் சட்டத்தின் 76ஆம் பிரிவின்படி நிறுவப்பட்ட மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்று பொருள்படும் ;

(e) ‘‘ஆணையம்’’ என்பது, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்று பொருள்படும் ;

(f) ‘‘அலுவல் நடப்புமுறை ஒழுங்குமுறைவிதிகள்’’ என்பது, 2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (அலுவல் நடப்புமுறை) ஒழுங்குமுறைவிதிகள் என்று பொருள்படும் ;

(g) ‘‘நுகர்வோர் /பயன்படுத்துநர் பங்களிப்புகள்’’ என்பது, உரிமம்தாரரின் வலையமைப்பை மின் செலுத்தல் / மின் பகிர்மானத்திற்குப் பயன்படுத்தும் அல்லது பயன்படுத்தக் கருதுபவர்களால் செய்யப்பட்ட பங்களிப்புகள் எவையும் என்று பொருள்படும்;

(h) ‘‘கட்டுப்பாட்டுக்காலம்’’ என்பது, பல்லாண்டுக்கான மின் கட்டணத் திட்டத்தின்படி அவ்வப்போது ஆணையத்தினால் நிர்ணயிக்கப்படும் பல்லாண்டு என்று பொருள்படும்;

(i) ‘‘ம.மி.செ.ப.நி.,’’ என்பது, மத்திய மின் செலுத்தல் பணி நிறுவனம் என்று பொருள்படும் ;

(j) ‘‘மின் பகிர்மானத் தொழில்’’ என்பது, மின் பகிர்மான உரிமம்தாரரின் மின் வழங்கல் பகுதியில் மின் வழங்குவதற்கான மின் பகிர்மான அமைப்பினை இயக்கும் மற்றும் பராமரிக்கும் தொழில் என்று பொருள்படும்;

(k) ‘‘மின் பகிர்வு உரிமம்தாரர் என்பது’’ உரிமம்தாரர், தம்முடைய மின் வழங்கல் பகுதியில் நுகர்வோருக்கு மின்சாரம் வழங்குவதற்கான மின் பகிர்வு அமைப்புமுறையை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும்

அதிகாரமளிக்கப்பட்டவர் என்று பொருள்படும் ;

(l) ‘‘க.எ.வ.’’ என்பது, தம்முடைய உரிமத்தின் வரையறைகளைத் தொடர்ந்து வசூலிப்பதற்கு உரிமம்தாரர் அனுமதிக்கப்படுகிற கட்டணங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் என்று பொருள்படும் ;

(m) ‘‘நிதியாண்டு’’ என்பது, நாட்காட்டி ஆண்டின் ஏப்ரல் 1ஆம் நாளன்று தொடங்கி, அதற்கு அடுத்துப் பின்வரும் நாட்காட்டி ஆண்டின் மார்ச் 31ஆம் நாளன்று முடிவடையும் ஆண்டு என்று பொருள்படும் ;

(n) ‘‘ மின் கட்டமைப்பு விதித் தொகுப்பு’’ என்பது, தமிழ்நாடு மின் கட்டமைப்பு விதித் தொகுப்பு என்று பொருள்படும் ;

(o) ‘‘உரிமம்’’ என்பது, சட்டத்தின் 14ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட உரிமம் என்று பொருள்படும் ;

(p) ‘‘ மின் கட்டணம் அல்லாத வருமானம்’’ என்பது,

  (i) மின் செலுத்தல் / மின் பகிர்மானத்திற்கான மின் கட்டணம் அல்லாத பிற வருமானம், மற்றும்

  (ii) பிற உரிமமளிக்கப்பட்ட தொழிலிருந்தான வருமானம் என்று பொருள்படும் ;

(q) ‘‘திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்’’ என்பது, தம்முடைய மின் வழங்கல் பகுதியில் மின் பகிர்மான உரிமம்தாரர் அல்லாத பிற நபரிடமிருந்து மின் வழங்கலைப் பெறுவதற்கு ஆணையத்தினால் அனுமதிக்கப்பட்ட நுகர்வோர் என்று பொருள்படும் மற்றும் திறந்த நுழைவுரிமையைப் பயன்படுத்தியுள்ள அல்லது பயன்படுத்தக் கருதியுள்ள மின் உற்பத்தி நிறுமம் மற்றும் உரிமம்தாரர்களையும் உள்ளடக்கும் ;

(r) ‘‘பிற தொழில்கள்’’ என்பது, மின் செலுத்தல் / மின் பகிர்மானச்சொத்துகளின் பெரிதும் உகந்தப் பயன்பாட்டிற்காக முறையே சட்டத்தின் 41 மற்றும் 51 ஆம் பிரிவுகளின்படி மின் செலுத்தல் / மின் பகிர்மான உரிமம்தாரரால் செய்யப்படும் தொழில் எதுவும் என்று பொருள்படும் மற்றும் மின் செலுத்தல் / மின் பகிர்மானத் தொழில் அல்லாத உரிமம்தாரரின் பிற தொழில் எதனையும் உள்ளடக்குதல் வேண்டும் ;

(s) ‘‘மாநிலம்’’ என்பது, தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும் ;

(t) ‘‘மா.மி.செ.ப.நி.’’ என்பது , மாநில மின் செலுத்தப்பணி நிறுவனம் என்று பொருள்படும் ;

(u) மா.மி.சு.ப.மை.’’ அல்லது மாநில மின் சுமை பகுப்பு மையம் ’’ என்பது, சட்டத்தின் 31ஆம் பிரிவின்படி நிறுவப்பட்ட மையம் என்று பொருள்படும் ;

(v) ‘‘மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகள்’’ என்பது, 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய(மின் கட்டணவீதத்தினை நிர்ணயம் செய்வதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகள் என்று பொருள்படும் ;

(w) ‘‘மின் செலுத்தல் தொழில்’’ என்பது, மாநிலத்திற்குள் மின் செலுத்தல் செய்யும் தொழில் என்று பொருள்படும் ;

2) இந்த ஒழுங்குமுறைவிதிகளில் காணப்படும் மற்றும் இதில் பொருள்வரையறை செய்யப்படாத, ஆனால் ஆணையத்தினால் வெளியிடப்பட்ட பிற ஒழுங்குமுறைவிதிகளில் அல்லது 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள சொற்கள் அல்லது சொற்றொடர்கள், இந்தச் சட்டத்தில் / ஒழுங்குமுறைவிதிகளில் அவற்றிற்கு முறையே குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருள்களை உடையனவாகும்.

## அத்தியாயம் – II

**3) பல்லாண்டுக்கான மின் கட்டணவீதத் திட்டம் :**

**(i) கட்டுப்பாட்டுக் காலம்.**

பல்லாண்டுக்கான மின் கட்டணவீதத் திட்டத்தின்படியான தொடக்கக் கட்டுப்பாட்டுக் காலமானது 3 ஆண்டுகள் கால அளவைக் கொண்டது ஆகும். அதன்பின்பு, ஒவ்வொரு கட்டுப்பாட்டுக் காலமும், வழக்கமாக 5 நிதியாண்டுகள் கால அளவு அல்லது அவ்வப்போது ஆணையத்தினால் அறிவிக்கை செய்யப்படலாகும் பிற கால அளவு ஆகும்.

**(ii) மொத்த வருவாய்த் தேவை (மொ.வ.தே) :**

பல்லாண்டுக்கான மின் கட்டண வீதத்தை நாடும் உரிமம்தாரர், மின் கட்டணவீத மனுவுடன்

சேர்த்து மின் கட்டண ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட அளவில் கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கான மொத்த வருவாய்த் தேவையை அளித்தல்வேண்டும்.

**(iii) தற்போதுள்ள மின் கட்டணவீதத்தில் கட்டணங்களிலிருந்தான மதிப்பிடப்பட்ட வருவாய் :**

உரிமம்தாரர், மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட அளவுகளில் கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கான தற்போதுள்ள மின் கட்டணவீதத்தில் மதிப்பிடப்பட்ட வருவாயை மின் கட்டணவீத மனுவுடன் சேர்த்து அளித்தல் வேண்டும்.

**(iv) தொழில் திட்டம் :**

ஒவ்வோர் உரிமம்தாரரும், கட்டுப்பாட்டுக் காலத்திற்கான பல்லாண்டு மின் கட்டணவீதத்துடன் சேர்த்து ஆணையத்தின் ஒப்புதலளிப்பிற்காக தொழில் திட்டத்தைத் தாக்கல் செய்தல் வேண்டும். அந்தத் தொழில் திட்டமானது, இயங்கிக் கொண்டிருக்கிற திட்டங்கள் குறித்த வகைத் தன்மை, இழப்புக் குறைப்பு, திறம்பட்ட மற்றும் மோசடி செய்ய இயலாத மின்னளவி முதலியவற்றுடன் புதிய திட்டங்கள் உள்ளடங்களான, அனைத்து நடவடிக்கைகளுக்கான திட்ட ஏற்பாட்டைக் கொண்டிருத்தல் வேண்டும். உரிமம்தாரர், திட்ட மதிப்பீட்டிற்காக மேற்கொண்ட அளவு கோலை அளித்தலும் வேண்டும்.

**(v) மூலதன முதலீட்டுத் திட்டம் :**

உரிமம்தாரர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளின் 17ஆம் ஒழுங்குமுறைவிதிக்கிணங்க தொடக்க கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்குமான மூலதன முதலீட்டுத் திட்டத்தின் ஒப்புதல் பெறுதல் வேண்டும். இது, பல்லாண்டுக்கான மின் கட்டணத் திட்டத்தின்படி மின் கட்டணவீதம் தாக்கல் செய்வதற்கு முன்பு, ஆணையத்தின் ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது என்று உறுதிசெய்யப்படலாம். முதலீட்டு மூலதனத்திட்டமானது, கட்டுப்பாட்டுக்காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கும் முதலீடாகப் பயன்படுத்தும் அட்டவணைகளைக் கொண்டது.

கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிலுமுள்ள மூலதனச் செலவினத்தை

ஏற்பதற்கான நிதி ஆதாரம் முதலீட்டு மூலதனத்திட்டத்துடன் சேர்த்து அளிக்கப்படுதல் வேண்டும்.

**(vi) குறித்த வகை மாற்றக்கூடிய செல்வழி (Trajectory) :**

உரிமம்தாரரின் செயலாக்கம், ஊக்கம் /ஊக்கத்தடை, குறித்தவகை மாற்றக்கூடிய செல்வழி மூலம் மேம்படுத்தப்பட வேண்டியதாக இருக்கிறவிடத்து, ஆணையத்தினால் அவைகள் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**(vii) வருவாய் மற்றும் செலவிலுள்ள மாறுதல்களின் உண்மைநிலை (True up) :**

விற்பனை மற்றும் மின் கொள்முதல் போன்ற கட்டுப்படுத்தக்கூடிய காரணிகளின் பொருட்டான மாறுதல்கள், உரிமம்தாரரின் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டின் முடிவிலும் மற்றும் ஆணையத்தினால் விவேகமான சரிபார்த்தல்கள் மூலமும் மறு ஆய்வு செய்யப்படுதல் வேண்டும்.

**(viii) கட்டுப்படுத்தக்கூடியதல்லாத காரணிகளின் பொருட்டு ஒப்புதலளிக்கப்பட்ட லாபங்கள் அல்லது நஷ்டங்களை ஏற்றுக் கொள்வதற்கான செயலமைவுத் திட்டம் :**

மின் கட்டணவீத ஒழுங்குமுறை விதிகளின் 14ஆம் ஒழுங்குமுறைவிதியில் குறிப்பிடப்பட்டவாறு, பின்வருவன கட்டுப்படுத்தக்கூடியதல்லாத செலவுகளாக அமைகின்றன :-

(a) எரிபொருள் செலவு

(b) பணவீக்கத்தின் பொருட்டான செலவுகள்

(c) வரிகள் மற்றும் தீர்வைகள், மற்றும்

(d) கட்டாயச் சூழ்நிலை மற்றும் காற்றின் வீச்சு போன்ற எதிர் மறையான இயற்கையான நிகழ்வுகளின் நேர்வில், நீர்மின்நிலையம் – அனல் மின் நிலையத்தின் கலவையின் பொருட்டான மின் உற்பத்தியில் மாறுதல்கள் உள்ளடங்களாக அடிப்படை மின் தொடர் மட்டத்திலிருந்து யூனிட் ஒன்றின் மின் கொள்முதல் விலை மாற்றம்.

உரிமம்தாரர், ஆணையத்தின் பரிசீலனை மற்றும் ஆணைகளுக்காக, அத்தகைய மாற்றத்தின் பொருட்டு மறு ஆய்வுக்கான விண்ணப்பத்தினைத் தாக்கல் செய்தல் வேண்டும். நீர் மின் நிலையம் – அனல் மின் நிலையத்தின் கலவையின் காரணமாக மின் கொள்முதல் யூனிட் செலவின் மாறுதல்கள் பொறுத்து, மாறுதல்கள், நீர் மின் நிலையச் சமப்படுத்துதல் நிதியத்தின் கணக்கில் உரியவாறு எடுத்துக் கொள்வதற்கு பரிசீலக்கப்படுதல் வேண்டும்.

**(ix) கட்டுப்படுத்தக்கூடிய காரணிகளிலிருந்து எழும் ஒப்புதலளிக்கப்பட்ட லாபங்களை அல்லது நஷ்டங்களை பங்கிடுவதற்கான செயல்முறை :**

கட்டுப்பாட்டுக் காலத்திலுள்ள ஆண்டுகளில் எதிலும் கட்டுப்படுத்தக்கூடிய செலவுகளுக்கான இலக்கை அடையத் தவறுகையின் காரணமான நிதி இழப்பு, ஏதேனுமிருப்பின், அது உரிமம்தாரர்களால் ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் லாபங்கள், எவையேனுமிருப்பின், அவை பயனாளிகளுடன் 50:50 என்ற வீதத்தில் பங்கிடப்படுதல் வேண்டும்.

**(x) செயல்திறனின் ஆண்டு மறு ஆய்வு :**

(a) ஆணையம், கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டு முடிவிலும், உரிமம்தாரரின் செயல்திறனை ஆண்டு தோறும் மறு ஆய்வு செய்யலாம்.

(b) கட்டுப்பாட்டுக் காலத்தின் தொடக்கத்தில் ஆணையத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட இலக்குகளை, எதிர் எதிராக செயல்திறனை மதிப்பிடுவதற்கு உள்ளபடியேயான செயல்திறனை ஆண்டு மறுஆய்வின் ஒரு பகுதியாக தகவலை, உரிமம்தாரர் அளித்தல் வேண்டும். இந்த ஒழுங்குமுறைவிதிகளுக்கிணங்க அண்மையில் கிடைக்கக்கூடிய தணிக்கை செய்யப்பட்ட / உள்ளபடியான கணக்குகள் மற்றும் கணக்கிடப்பட்ட மின் கட்டண வீதம் உள்ளடங்கலான அதனுடைய செயல்திறன் மற்றும் கணக்குகளில் ஆண்டு விவர அறிக்கைகளை உள்ளடக்குதல் வேண்டும்.

(c) ஆணையம், உரிமம்தாரரிடமிருந்தான விண்ணப்பத்தின் பேரில், அதற்கான

விரிவான காரணங்களுடன் எஞ்சிய கட்டுப்பாட்டுக் காலத்திற்காக ஆண்டு வருவாய்த் தேவையின் முன் மதிப்பீட்டில் மாற்றம் எதனையும் செய்யலாம்.

**4) பல்லாண்டுக்கான மின் கட்டணத் திட்டத்தின்படியாகத் தாக்கல் செய்தல் :**

ஒவ்வொரு உரிமம்தாரரும் ஆணையத்தினால் அறிவிக்கை செய்யப்படவேண்டிய நிதியாண்டிலிருந்து தொடங்கும் கட்டுப்பாட்டுக்காலத்திற்கான பல்லாண்டுக்கான மின் கட்டணத்திட்டத்தின்படியான மின் கட்டணவீத உத்தேசத் திட்டத்துடன் சேர்த்து ஆண்டு வருவாய்த் தேவை மற்றும் மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதலளிப்பிற்கான விண்ணப்பத்தினைத் தாக்கல் செய்தல்வேண்டும். தாக்கல் செய்தலானது, மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளுக்குரிய பிற்சேர்க்கை I–இல் குறித்துரைக்கப்பட்ட வடிவத்திலும் மற்றும் கட்டுப்பாட்டுக்காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கும் அதாவது, அடிப்படை ஆண்டு, கட்டுப்பாட்டுக்காலத்தின் 1ஆம் ஆண்டு, 2ஆம் ஆண்டு போன்ற பிற ஆண்டுகளுக்காகவும் மின் கட்டணவீத தாக்கலாக இருத்தல் வேண்டும்.

ஆணையம், ஏற்கெனவே 03–08–2005 அன்று மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளை அறிவிக்கை செய்துள்ளது. மேலேயுள்ள மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளிலுள்ள மின் கட்டண வீத தாக்கலுக்காக மதிப்பிடப்பட்ட வருவாய்கள் மற்றும் வடிவங்கள், கணக்கிடப்படும் செலவு மற்றும் விவர அறிக்கை மற்றும் ஆண்டு வருவாய்த் தேவைக்கான கணக்கின் பொதுவான நெறிகள், பல்லாண்டுக்கான மின் கட்டணவீதத்திட்டத்தின்படியான மின் கட்டணவீத தாக்கலுக்காகவுங்கூட ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மின் கட்டணவீதத்தை நிர்ணயிப்பதற்கான விண்ணப்பத்தினை செய்வதற்கான விரிவான நடைமுறை மற்றும் விண்ணப்பத்தின் பேரிலான முடிவு மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகள் 6ஆம் மற்றும் 7ஆம் விதிகளுக்குக்கிணங்க இருத்தல் வேண்டும்.

**5) விண்ணப்பத்தினை முடிவுசெய்தல் :**

(a) ஆணையம், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய அலுவல் நடத்து ஒழுங்குமுறைவிதிகளுடன் சேர்த்துப் படிக்கப்படும் இந்த ஒழுங்குமுறை

விதிகளுக்கிணங்க பல்லாண்டுக்கான மின் கட்டணவீதத்திட்டத்தின்படி உரிமம்தாரரால் தாக்கல் செய்யப்படுபவற்றிக்குச் சட்டப்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(b) உரிமம்தாரரின் தாக்கல் செய்யப்பட்டவை மற்றும் பொது மக்கள் மற்றும் பிற சம்பந்தப்பட்டவர்களிடமிருந்தான மறுப்புரைகள் /குறிப்புரைகளின் அடிப்படையில், ஆணையம், விண்ணப்பத்தினை மாற்றமைவுகளுடன் மற்றும் / அல்லது நேர்மையானது மற்றும் உரியது என்று கருதலாகும் நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொள்ளலாம் மற்றும் முழுமையான விண்ணப்பத்தினைப் பெற்ற 120 நாட்களுக்குள், கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கும் பொருந்தத்தக்க மின் கட்டண வீதத்தின் ஆணையைப் பிறப்பித்தல் வேண்டும். அந்த ஆணை, கட்டுப்படுத்தக்கூடிய இனங்களுக்கான இலக்குகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(c) ஆணையம், கட்டுப்பாட்டுக் காலத்திற்காகஅவசியமெனக் கருதலாகும் உரிய மாற்றமைவுகளுடன் தொழில் திட்டத்திற்குங் கூட ஒப்புதலளிக்கலாம்.

### அத்தியாயம் – III

**6) பல்லாண்டுக்கான மின் கட்டண வீதத்தின்படியான மாநிலத்திற்குள் மின் செலுத்தல் மின் கட்டண வீதத்தை நிர்ணயித்தல் :**

**1)** மாநில மின் செலுத்தப்பணி நிறுவனம் / மின் செலுத்தல் உரிமம்தாரர், மின் கட்டண வீத ஒழுங்குமுறை விதிகளிலுள்ள வகைமுறைகளுக்கிணங்க கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கும் மின் செலுத்தல் மின் கட்டண வீதத்தை நிர்ணயிப்பதற்கான விண்ணப்பத்தினைச் செய்தல் வேண்டும்.

**2)** கட்டுப்பாட்டுக்காலத்திற்கான ஆண்டு மின் செலுத்தல் கட்டணங்கள், உரிமம்தாரரின் தணிக்கை செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுதல் வேண்டும்.

**3)** மின் செலுத்தல் கட்டணங்கள், கீழே விவரமாகக் கொடுக்கப்பட்டவாறு கணக்கிடப்படுதல் வேண்டும்.

ஆண்டு மின் செலுத்தல் கட்டணங்கள் பின்வருவனவற்றைக் கொண்டது

ஆகும் :-

(i) மூலதனக் கடனின் பேரிலான வட்டி,

(ii) தேய்மானம்,

(iii) இயக்க மற்றும் பராமரிப்புச்செலவுகள்,

(iv) நடைமுதலின் பேரிலான வட்டி,

(v) மூலதனத்தின் மீதான வருவாய் (ROE),

மேலேயுள்ள கட்டணங்கள், பல்லாண்டுக்கான மின் கட்டணவீதத்திட்டத்தின்படி பின்வரும் அடிப்படையின் பேரில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

**7) மூலதனக்கடனின் பேரிலான வட்டி :**

கட்டுப்பாட்டுக்காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்குமான கடன் வாங்குதல் மற்றும் திருப்பிச் செலுத்துதல், ஒப்புதலளிக்கப்பட்ட மூலதன மூதலீட்டுத் திட்டம் மற்றும் மதிப்பிடப்பட்ட உள்வளவாயில்கள் (internal resources) குறித்து வந்து சேரலாம்.

கட்டுப்பாட்டுக்காலம் ஒவ்வொன்றின் கடன் மீதான வட்டி, மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளுக்குரிய (பகுதி III) பிற்சேர்க்கை Iஇல் உள்ள படிவம் 13இல் கணக்கிடப்படலாம்.

**8) தேய்மானம் :**

தேய்மான வீதங்கள், மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளுடன் இணைக்கப்பட்ட இணைப்புப்பட்டியலின்படி இருத்தல் வேண்டும்.

கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டின் சொத்துடைமையின் கூடுதல் ஒப்புதலளிக்கப்பட்ட மூலதனமாக்கலானது பட்டியலின்படி இருத்தல் வேண்டும்.

**9) இயக்கம் மற்றும் பராமரிப்பு :**

இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும் :–

பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவுகள்,

பணியாளர் – தொடர்பான செலவுகள், மற்றும்

நிர்வாக மற்றும் பொதுச் செலவுகள்.

இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவுகள் ஆணையத்தினால் திறமுடன்

சரிபார்க்கப்பட்ட பின்பு, தணிக்கை செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகளின் அடிப்படையில் அடிப்படை ஆண்டிற்கு முந்திய, கடந்த ஐந்தாண்டுகளுக்கு உள்ளபடியேயான செலவுகளின் அடிப்படையில் செலுத்தப்பெறுதல் வேண்டும்.

அடிப்படை ஆண்டிற்காக அவ்வாறு பெறப்பட்ட இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவுகள், கட்டுப்பாட்டுக்காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கும், ஆண்டுக்கு நான்கு விழுக்காடு ஏற்ற நிலையிலிருக்கலாம்.

உரிமம்தாரர், இயக்கம் மற்றும் பராமரிப்புச்செலவுகளின் மதிப்பீட்டினை குறியீட்டு அட்டவணைப்படுத்தவும் உத்தேசிக்கலாம்.

இயக்கம் மற்றும் பராமரிப்பு, கட்டுப்படுத்தக்கூடிய செலவு ஆகும் மற்றும் உரிமம்தாரர், வரன்முறைக்கு மேற்பட்டும் செலவினைத் திரும்பப் பெற முடியாது. உரிமம்தாரர், 3 (ix) ஒழுங்குமுறைவிதியில் வகை செய்யப்பட்டவாறு, பயனாளிகளுடன் சேமிப்புப் பொருட்டான லாபங்களை பங்கு பிரித்தல் வேண்டும்.

**10) நடைமுதலின் மீதான வட்டி :**

நடைமுதலுக்கான வரன்முறைகள், மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளின் 26ஆம் ஒழுங்குமுறைவிதியின்படி இருத்தல் வேண்டும். கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கான நடைமுதலின் அளவு, அந்தந்த ஆண்டுகளுக்குப் பொருந்தத்தக்க வெவ்வேறு உறுப்புகளின் மதிப்பு குறித்து கணக்கிடப்படும். நடைமுதல் மீதான வட்டி வீதம், கட்டுப்பாட்டுக்காலத்தின் தொடக்க ஆண்டின் ஏப்ரல் 1ஆம் நாளன்று இருந்தவாறு பாரத ஸ்டேட் வங்கியின் குறுகிய காலத் தொடக்க கடன் வீதத்திற்கு சமமாக இருத்தல் வேண்டும். கட்டுப்பாட்டுக் காலத்தில் பிந்திய ஆண்டுகளில் வீதங்களிலுள்ள மாறுதல் உள்ளபடியேயான சரிக்கட்டுதலின்படி (True up) பரிசீலிக்கப்படும்.

**11) மூலதனத்தின் மீதான வருவாய் :**

மூலதனத்தின் மீதான வருவாய், கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்குமான பின் வரி ஆண்டிற்கு 14 விழுக்காடாக இருத்தல் வேண்டும். இது மின்கட்டண வீத ஒழுங்குமுறைவிதி 22இன்படி கணக்கிடப்படுதல் வேண்டும்.

**12) மின் செலுத்தல் திறன் :**

மா.மி.செ.ப.நி / மின் செலுத்தல் உரிமம்தாரர், மின் கட்டணவீத விண்ணப்பத்துடன், அடிப்படை ஆண்டில் அனைத்து நீண்டகால வாடிக்கையாளர்களுக்கும் ஒதுக்கப்பட்ட

திறன் மற்றும் கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டுக்கும் உரியவாறு ஒதுக்கப்பட்ட திறன் குறித்த மதிப்பீடு, திட்டமிடப்பட்ட மின் உற்பத்தித் திறனின் கூடுதல்கள் குறித்து கட்டுப்பாட்டுக்காலத்தின் ஒவ்வோர் ஆண்டும் கிடைக்கத்தக்க திறனின் மதிப்பீடுகளையும் மா.மி.செ.ப.நி / மின் செலுத்தல் உரிமம்தாரர் அளித்தல் வேண்டும்.

**13) மா.மி.சு.ப.மைக் கட்டணங்கள் :**

மா.மி.செ.ப.நி / மின் செலுத்தல் உரிமம்தாரர், மா.மி.சு.ப.மைக் கட்டணங்களை நிர்ணயிக்கும் நோக்கத்திற்காக மா.மி.சு.ப.மை சொத்துக்களின் மதிப்பை பிரித்து வைக்கலாம் மற்றும் அதனை அளிக்கலாம்.

**14) மின் செலுத்தல் செலவினைப் பிரித்தல் :**

உரிமம்தாரர், ஒருங்கிணைக்கப்பட்ட மின் செலுத்தப்பணி நிறுவனமாக செயற்படுகிறவிடத்தெல்லாம், மின் செலுத்தல் செலவு, கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கும் உரியவாறு பிரிக்கப்படுதலும், திட்டமிடப்படுதலும் வேண்டும்.

**15) வருமானத்தின் மீதான வரிகள் :**

மின் செலுத்தல் உரிமம்தாரரின் வருமானத்தின் மீதான வரியானது, செலவுகளாகக் கணக்கிடப்படுதல் வேண்டும் மற்றும் உள்ளவாறே அனுமதிக்கப்படுதல் வேண்டும். உரிமம்தாரர், கட்டுப்பாட்டுக்காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்குமான வருமானவரியை மதிப்பிடுதல் வேண்டும். வேறுபாடு ஏதேனுமிருப்பின், அது, உள்ளபடியே கணக்கிடப்பட்ட வரியின் அடிப்படையில் சரிக்கட்டப்படுதல் வேண்டும்.

**16) ஊக்கத் தொகைகள் :**

மின் செலுத்தல் உரிமம்தாரர், 58(b) ஒழுங்குமுறைவிதியின்படி அதாவது, பின்வரும் சூத்திரத்திற்கு இணங்க 98 விழுக்காடு வகுத்துரைக்கப்பட்ட இலக்குக்கு மேல் கிடைக்கக்கூடிய ஒவ்வொரு விழுக்காட்டின் அதிகரிக்கும் புள்ளிக்குச் சமமாக மூலதனத்தின் மீது 1 விழுக்காடு என்ற வீதத்தில் ஊக்கத்தொகை பெற உரிமையுடையவராவார்.

ஊக்கத்தொகை = மூலதனம் (Equity) x (ஆண்டிற்குரிய பெறப்பட்ட திறன் – வகுத்துரைக்கப்பட்ட இலக்கு ) / 100.

(ஆணையத்தினால் முடிவுசெய்யப்பட்டவாறு) ஊக்கத்தொகையின் ஒரு பங்கு,

அவர்களின் சராசரியாக ஒதுக்கப்பட்ட திறனின் விகிதத்தில் நீண்டகால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களுடன் பங்கிடப்படுதல் வேண்டும்.

**17) தற்போதுள்ள மின் கட்டணவீதக் கட்டணங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் :**

மா.மி.செ.ப.நி./மின் செலுத்தல் உரிமம்தாரர், பல்லாண்டுக்கான மின் கட்டணத்திட்டத்தின்படி மின் கட்டண மனுவுடன் சேர்த்து மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளில் வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் கட்டுப்பாட்டு காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கான இருந்துவரும் மின் கட்டணவீதத்தில் எதிர்பார்க்கப்படும் வருவாயை அளித்தல் வேண்டும்.

**18) பிற வருமானம். :**

மா.மி.செ.ப.நி. / மின் செலுத்தல் உரிமம்தாரர், மின் கட்டண வீத ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட பிற வருமானத்தின் விவரங்களை அளித்தல் வேண்டும்.

**19) (பல்லாண்டுக்கான ) விவரிக்கப்பட்ட மின் கட்டணவீத உத்தேசத் திட்டம் :**

மா.மி.செ.ப.நி./மின் செலுத்தல் உரிமம்தாரர், ஆண்டு மின் செலுத்தல் கட்டணங்கள் மற்றும் மதிப்பிடப்பட்ட ஒதுக்கப்பட்ட திறன் அடிப்படையில் கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கான மின் கட்டணவீதத்தை திருத்தியமைக்க இந்த ஒழுங்குமுறைவிதி 12இல் உள்ளவாறு உத்தேசித்தல் வேண்டும்.

**20) மின் செலுத்தல் கட்டணங்களை நிர்ணயித்தல் :**

ஒவ்வோர் ஆண்டிற்கும் மின் பகிர்வு உரிமம்தாரர்கள், மற்றும் பிற பயனாளிகள் போன்று மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களில் நீண்டகாலமாக செலுத்தத்தக்க மின் செலுத்தல் கட்டணம் மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளின் 59ஆம் ஒழுங்குமுறைவிதியின்படி கணக்கிடப்படுதல் வேண்டும். நீண்ட கால பயனாளிகளால் மின் செலுத்தல் வசதிகளைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்கள் ஒதுக்கப்பட்ட திறனின் அடிப்படையிலும் மற்றும் மெகாவாட் / நாள் அடிப்படையிலும் இருத்தல் வேண்டும்.

**21) (மா.மி.சு.ப.மை ) மாநில மின் சுமைப் பகுப்பு மையத்திற்கான கட்டணங்கள் :**

மா.மி.சு.ப. மை–தின் செலவு பிரித்து வைக்கப்படும் காலம்வரை, கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கான மா.மி.சு.ப. மையத்திற்கான கட்டணங்கள், மொத்தத் தொகை அடிப்படையில் ஆணையத்தினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

**22) பல்லாண்டுக்கான மின் கட்டண வீதத்திட்டத்தின்படியான எதிர்வினைபுரி மின் கட்டணங்கள் :**

கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கான எதிர்வினைபுரி மின் கட்டணங்கள், மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளின்படி முறைப்படுத்தப்படுதல் வேண்டும். அந்த வீதம் பல்லாண்டுக்கான மின் கட்டணவீத ஆணையில் ஆணையத்தினால் அறிவிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் IV

**பல்லாண்டுக்கான மின் கட்டணவீதத்தின்படி மின் பகிர்மானத்திற்கான மின் கட்டணவீதத்தினை நிர்ணயித்தல்**

**23) மின் கட்டணவீதம் நிர்ணயிப்பதற்கான விண்ணப்பம் :**

மின் பகிர்வு உரிமம்தாரர், மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளில் அறிவிக்கை செய்யப்பட்ட நடைமுறைக்கு இணங்க மொத்தவருவாய்த் தேவையுடன் சேர்த்து, மின் விநியோகத்தின் கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டின் பல்லாண்டுக்கான மின் கட்டணவீதத் திட்டத்தின்படி மின் கட்டணவீதத்தைத் நிர்ணயிப்பதற்கான விண்ணப்பத்தினைத் தாக்கல் செய்தல் வேண்டும்

அந்த விண்ணப்பம், மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் கட்டுப்பாட்டுக் காலத்தில் அடங்கியுள்ள ஒவ்வோர் ஆண்டிற்கான பின்வரும் விவர அறிக்கைகளுடன் அளிக்கப்படுதல் வேண்டும் :-

(a) நடப்பு மின் கட்டணவீதத்தைக் காட்டும் விவர அறிக்கை மற்றும் பொருந்தத்தக்க விதிமுறைகளும் வரையறைகளும்.

(b) திட்டமிடப்பட்ட வளர்ச்சி வீதத்தின் வந்து சேருவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையில் குறிப்புடன் படிப்படியான அமைப்புமுறை

உள்ளடங்கலாக பல்வேறு வகையினரான நுகர்வோருக்கான தேவை / விற்பனை திட்டமிடுதலை காட்டும் விவர அறிக்கை.

(c) மொத்த தொழில் நுட்ப மற்றும் வணிக இழப்பு மற்றும் மின் கொள்முதல் ஆதாரங்களுடன் மின் தேவை பற்றிய விவரங்கள்.

(d) கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கான நடப்பு மின் கட்டணவீதத்தில் எதிர்பார்க்கப்படும் வருவாய் மற்றும் ஒவ்வோர் ஆண்டிலும் மின் கட்டணவீதத்துடன் சரி செய்யப்படவேண்டிய வருவாய் இடைவெளி விவரங்கள் அடங்கிய விவர அறிக்கை.

(e) பல்வேறு வகையினரான நுகர்வோருக்கு பல்வேறு மின் அழுத்த அளவில் மின் வழங்குவதற்கான செலவு ஒதுக்கப்பட்ட மின் செலுத்தல் மற்றும் மின் பகிர்மான இழப்பு மற்றும் தற்போதுள்ள மின் கட்டணவீதத்தில் நுகர்வோர் வாரியான குறுக்கு உதவித் தொகையை காட்டுகிற விவர அறிக்கை.

(f) தற்போதுள்ள மின் கட்டணவீதத்தில் அரசிடமிருந்து பெறப்பட்ட / பெறத்தக்க உதவித் தொகையைக் காட்டுகிற விவர அறிக்கை.

(g) ஒவ்வோரு வகையினரான நுகர்வோருக்கு உத்தேசிக்கப்பட்ட மின் கட்டணவீதத்திலுள்ள மாற்றங்களை மற்றும் திருத்தியமைக்கப்பட்ட மின் கட்டணவீதத்தில் மதிப்பிடப்பட்ட வருவாயைக் காட்டுகிற விவர அறிக்கை.

(h) திருத்தியமைக்கப்பட்ட மின் கட்டணவீதத்தில் குறுக்கு உதவித்தொகையை மற்றும் அரசால் ஒப்படைக்கப்பட்ட உதவித்தொகை, ஏதேனுமிருப்பின்,அதனைக் காட்டுகிற விவர அறிக்கை.

(i) ஆணையம் கோரலாகும் பிற தகவல் எதுவும்.

**24) தேவை மற்றும் மின் சக்தி பற்றிய முன்னறிவிப்பு :**

மின்பகிர்வு உரிமம்தாரர், கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கும் (படிப்படியான நுகர்வு உள்ளடங்கலான) பல்வேறு வகையினரான நுகர்வோருக்கான மின்தேவை மற்றும் மின் விற்பனை பற்றி முன்னறிவிப்பு செய்தல் வேண்டும்

உரிமம்தாரர், அடிப்படை ஆண்டிற்கு வகை வாரியான விற்பனையில் வந்து சேரும் சேர்க்கப்பட்ட சராசரி வளர்ச்சி வீதம் (CAGR) போன்ற பொருந்தத்தக்க வகைப்படுத்தி

ஒழுங்குமுறை செய்யும் முறையை மேற்கொள்ளலாம்.

உரிமம்தாரர், கட்டுப்பாட்டுக்காலத்தின் ஒவ்வோர் ஆண்டிலும் வகை வாரியாக இருந்து வரும் திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களின் தேவை மற்றும் திறந்த நுழைவுரிமைக்காக தெரிவு செய்துள்ள நுகர்வோரின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை மற்றும் கொண்டு செல்லப்பட வேண்டிய மதிப்பிடப்பட்ட மின்சாரத்தின் அளவு ஆகியவற்றை அளித்தல் வேண்டும். மின் பகிர்மான உரிமம்தாரரின் பகுதிக்குள் உள்ள மின் வழங்கல் மற்றும் மின் பகிர்மான உரிமம்தாரரின் பகுதிக்கு வெளியேயுள்ள மின் வழங்கல் பற்றிய விவரங்கள் தனித்தனியாக அளிக்கப்படலாம்.

**25) மொத்தத் தொழில் நுட்ப மற்றும் வணிக இழப்பு :**

ஆணையம், இழப்புகளைக் குறைப்பதற்காக மட்டக்குறிகளை (Bench Marks) நிர்ணயித்தல் வேண்டும் மற்றும் உரிமம்தாரர், கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடைதல் வேண்டும்.

மொத்தத் தொழில் நுட்ப மற்றும் வணிக இழப்பு, கட்டுப்படுத்தக்கூடிய இனமாகும், மற்றும் இலக்கினை அடையத் தவறுவதன் பொருட்டு ஏற்படும் நிதி இழப்பு, ஏதேனுமிருப்பின், அது மின் பகிர்வு உரிமம்தாரரால் ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். இலக்கிடப்பட்ட அளவிற்கும் கீழே ஏற்படும் இழப்பின் பொருட்டு கிடைக்கும் லாபங்கள், எவையேனுமிருப்பின், அவை நுகர்வோருடன் பங்கிடப்படுதல் வேண்டும்.

மின் பகிர்வு உரிமம்தாரர், வெவ்வேறு பகுதிகள் / இடங்களுக்கான மின் தணிக்கை முடிவுகளைச் சரிபார்ப்பதற்கு மூன்றாம் தரப்பினரை ஏற்பாடு செய்யலாம். சிறப்பாக முறைப்படுத்துவதற்கான திறம்பட்ட நடவடிக்கைக்கான கருத்து ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தக்கூடிய, மொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புக்காக அந்தப் பகுதி/ இடத்திற்கு குறித்தவகை உபரிக்கட்டணம் விதிப்பதற்கு உத்தேசிக்கலாம்.

மின் பகிர்வு உரிமம்தாரர், இழப்பினை குறைப்பதுடன் இணைந்த, தன்னுடைய பணியாளர்களுக்கு வட்டாரப் பகுதியின் அடிப்படையில் ஊக்கத் தொகை மற்றும் ஊக்கத்தடை திட்டங்களை அறிமுகப்படுத்தலாம்.

**26) மின்னாற்றல் உள்ளீட்டுத் தேவையின் மதிப்பீடு :**

மின்னாற்றல் உள்ளீட்டுத் தேவை, கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டின் மதிப்பிடப்பட்ட தேவை மற்றும் மொத்தத் தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பு அடிப்படையில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

**27) கிடைக்கக்கூடிய மின்னாற்றல் :**

மின் பகிர்வு உரிமம்தாரர், தகுதி ஆணை அனுப்பு நெறிகள் மற்றும் கிடைக்கக்கூடிய திறனின் மதிப்பிடப்பட்ட அதிகரிப்பு ஆகியவற்றை உரியவாறு கவனத்திற்கொண்டு கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டும் கொள்முதல் செய்யப்படவேண்டிய மின்னாற்றலின் ஆதாரங்கள் மற்றும் அளவினைக் கொடுத்தல் வேண்டும்.

மின் பகிர்வு உரிமம்தாரர்கள், மின் உற்பத்தி நிலையங்களை தாம் சொந்தமாகக் கொண்டிருக்கிறவிடத்து, மின் உற்பத்தியிலிருந்து கிடைக்கக்கூடிய அளவு, வழக்கமான மின் நிலையத்தின் சுமைக்காரணி மற்றும் துணை நுகர்வு இவற்றுடன் கணக்கிடப்படுதல் வேண்டும்.

சொந்த நீர் நிலையங்களிலிருந்து கிடைக்கக்கூடிய அளவு, மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறு மின் நிலையத்தின் சுமைக் காரணியின் 25 விழுக்காட்டின் அடிப்படையில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

**28) மின் கொள்முதலுக்கான செலவு :**

மின் பகிர்வு உரிமம்தாரர், கண்டிப்பாக தகுதி ஆணை அனுப்பு அடிப்படையில் கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டின் மின் கொள்முதல் செலவினை முன்னறிவிப்பு செய்தல் வேண்டும்.

மின் பகிர்வு உரிமம்தாரர், கட்டுப்பாட்டுக் காலத்தின் போது, எரிபொருள் விலையில் ஏற்படும் மாற்றங்களின் பொருட்டு மின் கொள்முதல் விலையில் மாற்றல் இருக்கிறவிடத்து, எரிபொருள் உபரிக்கட்டணம் சரிக்கட்டலுக்கான மனுவைத் தாக்கல் செய்யலாம். ஆணையம், உரியவாறு, பல்வேறு வகையினரான நுகர்வோர்களுக்கு மின் கொள்முதல் செலவில் யூனிட் ஒன்றுக்கு அதிகரிப்பு / குறைப்பு ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கலாம்.

பருவமழை தவறுவதன் விளைவாக, மின் கொள்முதல் அளவிலுள்ள அதிகரிப்பின்

பொருட்டு மின் கொள்முதல் செலவிலுள்ள அதிகரிப்பு, நீர் மின்நிலைய சமன்செய்யும் நிதியத்தில் சரிக்கட்டப்படுதல் வேண்டும்.

**29) இயக்கம் மற்றும் பராமரிப்பு :**

இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவுகள் பின் வருவனவற்றை உள்ளடக்கும் : -

பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவுகள், பணியாளர் தொடர்பான செலவுகள்

நிர்வாக மற்றும் பொதுச் செலவுகள் மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவுகள், ஆணையத்தினால் திறமுடன் சரிபார்க்கப்பட்ட பின்பு, தணிக்கை செய்யப்பட்ட ஆண்டுக்கணக்குகளின் அடிப்படையில் அடிப்படை ஆண்டிற்கு முந்திய கடந்த ஐந்தாண்டுகளுக்கு உள்ளபடியேயான செலவுகளின் அடிப்படையில் செலுத்தப் பெறுதல் வேண்டும்.

அடிப்படை ஆண்டிற்காக அவ்வாறு வரப்பெற்ற இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவுகள்,

கட்டுப்பாட்டுக்காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கும், ஆண்டுக்கு நான்கு விழுக்காடு ஏற்ற நிலையிலிருக்கலாம்.

உரிமம்தாரர், இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவுகளின் மதிப்பீட்டினை குறியீட்டு அட்டவணைப்படுத்தவும் உத்தேசிக்கலாம்.

இயக்கம் மற்றும் பராமரிப்பு, கட்டுப்படுத்தக்கூடிய செலவு ஆகும். மற்றும் உரிமம்தாரர், வரன்முறைக்கு மேற்படும் செலவினைத் திரும்பப் பெற முடியாது. உரிமம்தாரர், 3 (ix) ஒழுங்குமுறைவிதியில் வகை செய்யப்பட்டவாறு, பயனாளிகளுடன் சேமிப்புப் பொருட்டான லாபங்களை பங்கு பிரித்தல் வேண்டும்.

**30) தேய்மானம் :**

தேய்மான வீதங்கள், மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளுடன் இணைக்கப்பட்ட இணைப்புப் பட்டியலின்படி இருத்தல் வேண்டும்.

கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டின் சொத்துடைமையின் கூடுதல் ஒப்புதலளிக்கப்பட்ட மூலதனமாக்கலானது பட்டியலின்படி இருத்தல் வேண்டும்.

**31) மூலதனக்கடனின் பேரிலான வட்டி :**

கட்டுப்பாட்டுக்காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்குமான கடன் வாங்குதல் மற்றும் திருப்பிச் செலுத்தல், ஒப்புதலளிக்கப்பட்ட மூலதன முதலீட்டுத் திட்டம் மற்றும் மதிப்பிடப்பட்ட உள்வளவாயில்கள் குறித்து வந்து சேரலாம்.

கட்டுப்பாட்டுக் காலம் ஒவ்வொன்றின் கடன் மீதான வட்டி மின்கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளுக்குரிய பகுதி (III) பிற்சேர்க்கை Iஇல் உள்ள படிவம் 13 இல் கணக்கிடப்படலாம்.

**32) வருமானத்தின் மீதான வரிகள் :**

மின் பகிர்மான உரிமம்தாரரின் வருமானத்தின் மீதான வரியானது, செலவுகளாகக் கணக்கிடப்படுதல் வேண்டும் மற்றும் உள்ளவாறே அனுமதிக்கப்படுதல் வேண்டும். உரிமம்தாரர், கட்டுப்பாட்டுக்காலத்தின் ஒவ்வோர் ஆண்டின் வருமான வரியை மதிப்பீடுதல் வேண்டும். வேறுபாடு, ஏதேனுமிருப்பின், அது உள்ளபடியே வரிக்கணக்கிடுதலின் அடிப்டையில் சரிக்கட்டப்படுதல் வேண்டும்.

**33) வாராக்கடன்கள் மற்றும் ஐயப்பாடானக் கடன்கள் :**

மின் பகிர்வு உரிமம்தாரர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளின் 29ஆம் ஒழுங்குமுறைவிதிக்கிணங்க வாராக்கடன்கள் மற்றும் ஐயப்பாடான கடன்களுக்காக ஒவ்வோர் ஆண்டிற்கும் இன்னும் கொடுபடாதிருக்கிற கடனாளிகளுக்காக 0.25 விழுக்காடு தொகையை ஒதுக்கி வைத்தல் வேண்டும்.

**34) காப்பீடு :**

மின் பகிர்வு உரிமம்தாரர், சுய காப்பீடு நடைமுறையை மேற்கொள்ளலாம் மற்றும் மூலதனச் செலவின் 0.5 விழுக்காடு தொகை ஒதுக்கி வகை செய்தவற்கு, கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டின் அவர்களுடைய வருவாய்த் தேவையில் ஆணையத்தினால் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

**35) எதிர்பாராச்செலவு ஒதுக்கீடு :**

எதிர்பாராத பொறுப்புகள் அல்லது எதிர்பாராமல் ஏற்படும் வருவாய் இழப்புகள்

எவற்றையும் ஏற்பதற்கு மின் பகிர்வு உரிமம்தாரர்கள், எதிர்பாராச் செலவு ஒதுக்கீட்டினை பேணி வருதல் வேண்டும். மின் பகிர்வு உரிமம்தாரர்கள், கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கான சொத்துடைமைகளின் மதிப்பின் பேரில் எதிர்பாராச் செலவு ஒதுக்கீட்டினை மதிப்பிடுதல் வேண்டும்.

**36) மூலதனத்தின் மீதான வருவாய் :**

மூலதனத்தின் மீதான வருவாய், கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்குமான பின்வரி ஆண்டிற்கு 14 விழுக்காடாக இருத்தல் வேண்டும்.

**37) தற்போதுள்ள மின் கட்டணவீதத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் :**

மின் பகிர்மான உரிமம்தாரர், பல்லாண்டுக்கான மின் கட்டணத்தின்படி மின் கட்டண மனுவுடன் சேர்த்து மின் கட்டண வீத ஒழுங்குமுறைவிதிகளில் வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கான தற்போதுள்ள மின் கட்டண வீதத்தில் எதிர்பார்க்கப்படும் வருவாயை அளித்தல் வேண்டும்.

**38) மின் கட்டணவீதமல்லாத வருவாய் :**

மின் பகிர்வு உரிமம்தாரர், மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் கட்டுப்பாட்டுக்காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட மின் கட்டணவீதமல்லாத வருமானத்தின் விவரங்களை அளித்தல் வேண்டும்.

**39) பிற வருமானம்:**

மின் பகிர்மான உரிமம்தாரர், மின் கட்டணவீத ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட பிற வருமானத்தின் விவரங்களை அளித்தல் வேண்டும்.

**40) (பல்லாண்டுக்கான) விவரிக்கப்பட்ட மின் கட்டணவீத உத்தேசத் திட்டம் :**

மின் பகிர்மான உரிமம்தாரர், ஆண்டு வருவாய்த் தேவை, மின் கட்டணவீதமல்லாத

வருமானம் மற்றும் பிற வருமானம் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டு பல்வேறு வகையினரான நுகர்வோருக்கு, கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டின் மின் கட்டணவீதத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**41) மின்சாரம் கொண்டு செல்தல் கட்டணம், உபரிக் கட்டணம் :**

மின் பகிர்வு உரிமம்தாரர், கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கான மின்சாரம் கொண்டு செல்தல் கட்டணம், உபரிக்கட்டணம் மற்றும் கூடுதல் கட்டணம் ஆகியவற்றை நிர்ணயிப்பதற்கான உத்தேசத் திட்டத்தை, பல்லாண்டுக்கான மின் கட்டணவீத ஆவணங்களுடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். இந்த உத்தேசத் திட்டம் கட்டுப்பாட்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிற்கும் பின்வரும் விவரங்களை கொண்டிருத்தல் வேண்டும் : -

(i) மின்னழுத்தம் வாரியாக மதிப்பிடப்பட்ட சொத்துடைமைகளின் மதிப்பு,

(ii) ஒவ்வோர் மின்னழுத்தத்திலும் பல்வேறு வகையினரான நுகர்வோருக்கு மின்சக்தி விற்பனையின் மதிப்பிடப்பட்ட அளவு,

(iii) அதிஉயர் அழுத்தம், உயர் அழுத்தம் மற்றும் தாழ்வழுத்த மின்னமைப்புகளில் மின் வழுங்கலுக்காக (வருவாய் செலவுகள்) மதிப்பிடப்பட்ட செலவுக் கூறுகள்,

(iv) மதிப்பிடப்பட்ட மின்னழுத்த வாரியான மொத்த தொழில் நுட்ப மற்றும் வணிக இழப்பு,

(v) மதிப்பிடப்பட்ட குறுக்கு உதவித் தொகையின் அளவுகள்,

(vi) அநேகமாக இக்கட்டிற்குட்படவுள்ள (Stranded) மதிப்பிடப்பட்ட மின் தேவையின் அளவு.

## அத்தியாயம் V

### பல்வகை

**42) திருத்தம் செய்வதற்கான அதிகாரம் :**

ஆணையம், எழுத்துவடிவில் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக, எந்த

நேரத்திலும், தானாக முற்பட்டோ அல்லது தம்முன் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரிலோ இந்த ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளில் எவற்றையும் சேர்க்கலாம், மாற்றலாம், மாறுதல் செய்யலாம், மாற்றியமைக்கலாம், விட்டுவிடலாம் அல்லது திருத்தம் செய்யலாம்.

**43) இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு அதிகாரம் :**

இந்த ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகள் எவற்றையும் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு எதுவும் எழுமானால், ஆணையம், தானாக முற்பட்டோ அல்லது பிறவாறோ பொது அல்லது குறித்தவகை ஆணையின் மூலம், அந்த இடர்ப்பாட்டினை நீக்குவதற்கு அவசியமெனத் தோன்றலாகும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வுதலாக இராத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

**44) ஆணையத்தின் உள்ளுறை அதிகாரம் :**

இந்த ஒழுங்குமுறைவிதிகளிலுள்ள எதுவும், ஆணையம், பொருட்பாட்டின் அல்லது பொருட்பாடுகளின் வகையின் சிறப்பு சூழ்நிலைகளின் காரணமாகவும் மற்றும் எழுத்துவடிவில் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காகவும், அத்தகைய பொருட்பாடு அல்லது பொருட்களின் வகையை பொறுத்து நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் அல்லது உகந்தது என்று ஆணையம் கருதுமானால், இந்தச் சட்டத்தின் வகைமுறை இந்த ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளில் எதனின் மாறுதலான நடைமுறையை ஏற்றுக் கொள்வதிலிருந்து ஆணையத்தைத் தடை செய்தல் ஆகாது.

[தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி]

இரா. பாலசுப்பிரமணியன்
**செயலாளர்**